மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, நான் மீண்டும் மீண்டும் ஒரே பதிலைத்தான் சொல்ல வேண்டிய சூழ்நிலை எனக்கு இருக்கிற காரணத்தால் சொல்கிறேன். கால் நடைத் தீவனங்களைப் பொறுத்தவரையில் பிண்ணாக்கு, பருத்தி போன்றவைகளைக் கட்டுப்படுத்துகின்ற அதிகாரம் இந்தத் துறையிலே இல்லை என்பதை ஏற்கெனவே தெளிவாக்கியிருக்கிறேன். வெளியிலிருந்து அவைகளைக் கொண்டுவந்தாலும் அதைக் கட்டுப்படுத்துவதற்கும் அதிகாரம் இல்லை. வெளியிலே என்ன விலைக்கு விற்கப்படுகிறது என்ற புள்ளிவிவரத்தை வேண்டுமானால் தருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கோதண்டராமன் புதிய கருத்து கேட்க கேள்வி அனுமதிக்கப்படுகிறது.

திரு. வி. கே. கோதண்டராமன்: சார், கால்நடை அபிவிருத்தி என்ற நல்ல நோக்கத்தோடு கால்நடைக் கண்காட்சி நடத்தப்படுகிறது. அந்தக் கால்நடைகளுக்கு சத்துணவு பிண்ணாக்கும், பருத்திக்கொட்டையும்தான். அவைகளின் விலை அதிகமாவதற்கு பல காரணங்களைச் சொல்லுகிறார்கள், ஒரு காரணம் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது என்பது, அதைத் தடுத்து நிறுத்த திட்டமுண்டா ? இரண்டு வருடங்களாக எவ்வளவு ஏற்றுமதி செய்யப்பட்டது ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, கால்நடைகளுக்கு பிண்ணாக்கு, பருத்திக்கொட்டை போன்ற சத்துணவு தேவை என்பதை ஒப்புக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் ஒரு விவசாயி என்ற காரணத்தை முன்னிட்டு— விவசாயி இல்லை என்று சொல்கிறார்— ஆனாலும் அவருடைய தொகுதியிலே உள்ள விவசாயப் பெருங்குடி மக்களுக்குச் சொல்கிறேன்; கால்நடைத் தீவனங்கள் ஏற்றுமதி செய்யப்படுகிற செயற்குறிப்பும் இல்லை; எவ்வளவு தொகைக்கு ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது என்ற குறிப்புகளும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருச்சிராப்பள்ளி மாவட்டத் தொழிற்பேட்டைகளில் தொழிற் பிரிவுகள்.

*வினா எண். 435—திரு. செ. சதாசிவம் ; மாண்புமிகு கிராமத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டத்தில் சிறு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் மூலமாக இயங்கிவரும் தொழிற்பேட்டைகளில் எத்தனை தொழிற் பிரிவுகள் இயங்கி வருகின்றன ?

(ஆ) எத்தனை தொழிற் பிரிவுகள் மூடியுள்ளன ?

(இ) மூடியிருப்பதற்குக் காரணமென்ன ?

1979 மார்ச் 16]

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) திருச்சி மாவட்டத்தில் சிறு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் மூலமாக இயங்கி வரும் தொழிற்பேட்டைகளில் 72 தொழில் பிரிவுகள் இயங்கி வருகின்றன,

(ஆ) மூன்று தொழிற் பிரிவுகள் மூடப்பட்டுள்ளன.

(இ) அவை நட்டத்தில் இயங்கியதாலும், பணம் பற்றாக்குறை காரணமாகவும் பங்குதாரர்களுக்குள் ஏற்பட்ட பூசல் காரணமாகவும் மூடப்பட்டுள்ளன.

திரு. சி. மாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பங்குதாரர்களுக்குள் உள்ள சண்டையைத் தீர்க்க அரசு முன்வருமா ? அந்தத் தொழிற்சாலையை நடத்த என்ன ஏற்பாடு செய்யப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: பேரவைத் தலைவர் அவர்களே, தொழிற்சாலை நடத்தப்படுகிறபோது தொழிற்சாலையை நடத்துகின்ற முதலாளிகளுக்கும் அதிலே பணியாற்றுகின்ற தொழிலாளர்களுக்கும் ஏதாவது தகராறு ஏற்பட்டால் அதைச் சுமுகமாகத் தீர்த்து வைத்து தொழிற்சாலையை நடத்த அரசு இப்போது செயல்படுகிறது. ஆனால், பங்குதாரர்கள் ஏன் சண்டைபோடுகிறார்கள் என்று நமக்குத் தெரியவில்லை. ஒன்று அந்தச் சண்டையை அவர்கள் விரைவாக தீர்த்துக் கொள்ள வேண்டும், இல்லாவிட்டால் நாமே அந்தத் தொழிற்சாலையை நடத்துவதுதான் சரியாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

திரு. கே. சௌந்திரராசன் : தலைவர் அவர்களே, மூடப்பட்ட அந்தத் தொழிற்சாலைகள் எவை எவை ? அவைகளை நடத்துவதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறது? மூதலீடு முடக்கத்தால் மூடப்பட்டிருந்தால் அதைத் தொடங்குவதற்கு அரசு எந்த வகையில் உதவி செய்ய முன்வரும்?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவர் அவர்களே, அரியமங்கலம் தொழிற்பேட்டையில் உள்ள கோவாப்பரேடிவ் மெட்டல் ரோலிங் மில் அது ஏற்படுத்தப்பட்ட நோக்கத்திற்கு மாறாக உற்பத்தியிலும் சந்தையிலும் எந்தவிதமான முன்னேற்றமும் இல்லாத காரணத்தினாலே செயல்படாமல் நிறுத்தப்பட்டு இருக்கிறது. லைட் மெட்டல் இன்டஸ்ட்ரீஸ் நிதி நெருக்கடி காரணமாகச் செயல்படாமல் இருக்கிறது. அந்த நிதி நெருக்கடியை எப்படிப் போக்குவது என்று இந்த அரசு ஒரு புதிய திட்டத்தை நிதிநிலை அறிக்கையிலே சுட்டிக்காட்டியிருக்கிறது. சிட்கோ நிறுவனத்தின் மூலமாக மூலதன கடன் பெறுவதற்கு இப்பொழுது ஏற்பாடுகள் சிலவற்றைச் செய்திருக்கிறோம். 20

சதவீதம் வரையில் அந்தத் தொழிற்சாலைகளுக்கு வட்டியில்லாத கடனை சிட்கோ நிறுவனம் வழங்கும். அதை வைத்துக்கொண்டு வங்கிகள் மூலம் மேலும் பணம் பெற்று அந்தத் தொழிற்சாலைகளை நடத்துவதற்கு தொழிலதிபர்கள் முன்வரலாம்.

திருவெறும்பூரில் '' சுவாமி கட்டுமானத் தொழில் '' பங்குதாரர்கள் தகராறினால் நின்றிருக்கிறது.

மொத்தமுள்ள 75 தொழிற்சாலைகளில் மூன்று தொழிற்சாலைகள்தான் இந்தப் பிரச்சனைகளால் நின்றிருக்கின்றன. அதில் இரண்டு தொழிற்சாலைகள் செயல்படுவதற்கு சாத்தியம் இருப்பதாக அரசு நம்புகிறது.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, தொழிற்சாலைகள் மூடப்படுவதற்கு முக்கியமான காரணம், '' ஒர்க்கிங் கேபிடல் '' இல்லாததுதான். அமைச்சரவர்கள் சொன்னார்கள், நேஷனலைஸ்ட் பேங்குகள் மூலமாகவும், சிட்கோ மூலமாகவும் உதவி செய்யப்படும் என்று. ஆனால் ஒர்க்கிங் கேபிடல் கேட்கும் பொழுது சிட்கோவோ, டி.ஐ.சி.யோ, நேஷனலைஸ்ட் பேங்குகளோ கொடுக்க முன்வருவதில்லை. எனவே, அரசாங்கம் விசேஷ திட்டம் ஒன்றை வகுத்து ஒர்க்கிங் கேபிடல் கொடுப்பதற்கான நடவடிக்கையை, கடனாகக் கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சாதிக் அவர்களுக்கு, அரசு நிறுவனங்கள் மூலதனக் கடன்கள் கொடுப்பதில்லை என்பது நன்கு தெரியும் என்று நினைக்கிறேன். அந்த நிறுவனங்களெல்லாம் '' டெர்ம் லோன் '' என்று சொல்லும் அளவிற்கு கட்டுமான பணிகளுக்கு நிதி உதவி செய்து வருகின்றன. மூலதனக் கடன்—ஒர்க்கிங் கேபிடல் லோன்—வேண்டுமென்றால் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிலும், மற்ற வங்கிகளிலும் பெறுவதற்கான வாய்ப்பிருக்கிறது. ஆனால், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் இப்பொழுது இந்த மூலதனக் கடன்களைத் தர மறுக்கின்றன அல்லது அஞ்சுகின்றன என்பதை உணர்ந்து, இந்த நிதிநிலை அறிக்கையில் சிட்கோ மூலம் '' மார்ஜின் மணி அசிஸ்டன்ஸ் '' என்ற திட்டத்தை அறிவித்திருக்கிறோம். அதன்படி 20 சதவீதம் வரை வட்டியில்லாக் கடனை அந்த நிறுவனங்களின் சார்பில் வங்கியில் முன்பணம் செலுத்துகிறோம். 80 சதவீதம் மூலதனக் கடனை அவைகள் வழங்கும். வங்கிக்கு முதலிலே கடனைச் செலுத்திவிட்டு 'பிறகு சிட்கோவிற்குச் செலுத்தினால் போதும் என்ற ஏற்பாட்டின்படி சிறு தொழில்களுக்கு இந்த வகையில் நிதி உதவியைப் பெற்று வளர்ச்சியடைய வழிகள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1979 மார்ச் 16]

திரு. ப. சந்திரன் : தலைவரவர்களே, மூன்று பிரிவுகளில் இப்பொழுது நிறுத்தப்பட்டிருப்பதாக அமைச்சரவர்கள அறிவித்தார்கள். அந்த மூன்று பிரிவுகளில் பணியாற்றிய தொழிலாளர்களுக்கு இப்பொழுது மாற்று வேலைத் திட்டத்தை அரசு வழங்கியுள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவரவர்களே, அப்படிப்பட்ட மூடப்பட்டிருக்கின்ற அந்தத் தொழிற்சாலைகளை உடனடியாகத் திரும்பவும் நடத்துவதற்கான சாத்தியக்கூறுகளை விரைவுபடுத்துவதன் மூலமாக ஏற்கெனவே பணியாற்றி வருகின்ற அந்தத் தொழிற்சாலைகளிலே அந்தத் தொழிலாளர்கள் பணியாற்றினால்தான் பலவிதமான நன்மைகள் இருக்கின்றன என்று அரசு உணர்கிறது. எனவேதான் அந்தத் தொழிற்சாலைகளை விரைவிலே நடத்த ஏற்பாடுகள் செய்து வருகிறது.

மாவட்டத் தொழில் மையங்கள்.

* வினா எண் 436—திரு. கு. ரமணி : திரு. எஸ். கணேசன்: மாண்புமிகு கிராமத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு தொழில் மையத்தை அமைக்கும் திட்டத்தைப்பற்றி மத்திய அரசு மாநில அரசுக்கு யோசனை கூறியுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், தமிழ் நாட்டில் எந்தெந்த மாவட்டங்களில் அமைக்கப்படும் ?

(இ) அதற்கு மத்திய அரசின் உதவி என்ன கிடைக்கும்?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) ஆம்.

(ஆ) தமிழ்நாட்டில் செங்கல்பட்டு, சேலம், தர்மபுரி, இராமநாதபுரம், திருநெல்வேலி, தென்னாற்காடு, புதுக்கோட்டை, கன்னியாகுமரி ஆகிய எட்டு மாவட்டங்களில் மாவட்டத் தொழில் மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மற்ற மாவட்டங்களில் இவ்வாண்டு இறுதிக்குள் தொழில் மையங்கள் அமைக்கப்படும்.

(இ) ஒவ்வொரு மாவட்டத் தொழில் மையத்திற்கும் அலுவலகக் கட்டிடம் கட்ட, ஊர்திகள், மேசை நாற்காலிகள் போன்ற அலுவலகப் பொருட்கள் வாங்க தொடராச் செலவினமாக ரூபாய் 5 இலட்சமும், பணியாளர்களுக்கு ஆகும் தொடரும் செலவினத்தில் 75 சதவிகிதத் தொகையை ஆண்டிற்கு ரூபாய் 3.75 இலட்சம் வரம்பிற்குட்பட்டு ஏற்றுக்கொள்ள மத்திய அரசு இசைந்துள்ளது.